1981 மார்ச் 24]

பேரணி கிராம கால்நடைப் பராமரிப்பு நிலையம்.

*வினா எண் 470—திரு.கே.எம். தங்கமணி கவுண்டர்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் சட்டமன்ற தொகுதி மைலம் பஞ்சாயத்து யூனியன் பேரணி கிராமத்தில் இயங்கி வந்த கால்நடை பராமரிப்பு நிலையம் சமீபத்தில் மூடப்பட்டிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) அப்பகுதியில் ஏராளமான கால்நடைகள் இருப்பதால் இந்நிலையம் மீண்டும் இயங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) அறியும். நிர்வாக காரணங்களால் 1979 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 10 ஆம் நாள் முதல் இந்நிலையம் செயல்படவில்லை.

(ஆ) பேரணி கிளை நிலையத்தில் பணிபுரிந்து வந்த கால்நடை உதவியாளர் மாற்றப்பட்டதால் கிளை நிலையம் இயங்காத நிலை ஏற்பட்டுள்ளது. இந் நிலையம் மீண்டும் இயங்க ஆவன செய்யப்படும்.

[முற்பகல் 10-30]

திரு. கே. எம். தங்கமணி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்தக் கால்நடைப் பராமரிப்பு நிலையம் மூடப்பட்டிருப்பதற்கான காரணம் என்ன? அங்கிருந்த கால்நடை உதவியாளர் மாற்றப்பட்டு விட்டார் என்பதால் கால்நடை பராமரிப்பு நிலையம் மூடப்பட்டது என்று சொல்வது சரியா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே விடையில் குறிப்பிட்டேன், பேரணி கிளை நிலையத்தில் பணிபுரிந்து வந்த கால்நடை உதவியாளர் மாற்றப்பட்டதால் கிளை நிலையம் இயங்காத நிலை ஏற்பட்டுள்ளது என்று. இந்நிலையம் மீண்டும் இயங்குவதற்கு ஆவன செய்யப்படும்.

திரு. கே. எம். தங்கமணி கவுண்டர் : துணைத் தலைவரவர்களே, அங்கே பணியாற்றிய கால்நடை உதவியாளர் மாற்றப்பட்டார் என்பது அரசுக்குத் தெரிந்தவுடன் வேறொருவரை ஏன் நியமனம் செய்யவில்லை? அதற்கான காரணம் என்ன? அவரை ஏன் மாற்றினார்கள்? உடனடியாக ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? இனிமேல் என்றையதினத்தில் அந்தக் கால்நடை பராமரிப்பு நிலையம் இயங்கும் என்பதை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அவர் மாற்றப்பட்டவுடன் ஏன் அந்த இடத்தில் வேறொரு உதவியாளர் பதிவியை ஏற்று வேலை செய்யவில்லை என்று கேட்டார்கள். பல கிளை நிலையங்கள் கால்நடை ஆய்வாளர்கள் இல்லாமல் இருந்து வருகின்றன. (சிரிப்பு) நான் பதில் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே ஏன் சிரிக்க வேண்டும்? நான் இன்னும் பதிலை முடிக்கவில்லை. இதனைக் கருத்திற்கொண்டு மீண்டும் ஆய்வாளர்கள் பயிற்சியைத் தொடங்க அரசு ஆவன செய்து வருகிறது. அத்துடன் 'புல் ஸ்டேஷனி'ல் அதிகப்படியாக உள்ள கால்நடை ஆய்வாளர்களைத் திரும்பப் பெற்றுக் காலியாக உள்ள கிளை நிலையங்களிலே அமர்த்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே, காலியாக உள்ள கிளை நிலையங்களில் விரைவில் ஆய்வாளர்களைக் கொண்டு நிரப்பப்படும் என்பதை உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு ஆர். தியாகராசன்: மரியாதைக்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்தக் கால்நடை மருத்துவமனைகளில் அலுவலர்கள் இல்லாததால் பல ஊர்களில், குறிப்பாக எங்கள் பகுதியில் விருத்தாசலம் பகுதியில் ஒரு ஊரிலே இதைப்போலவே மூடப்பட்டிருக்கிறது. கோபாலபுரம் என்ற இடத்திலே மூன்று மாதங்களுக்கு மேலாக கால்நடை ஆய்வாளர்கள் இல்லாததால் மூடப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே உள்ள கால்நடைகள் கோமாரி போன்ற பல நோய்களால் தாக்கப்பட்டு இறந்திருக்கின்றன. இது அமைச்சவரர்களுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கால்நடை ஆய்வாளர்கள் அதிக எண்ணிக்கையில் இம்மாத காரணத்தினால்தான் மீண்டும் ஆய்வாளர்கள் பயிற்சியைத் தொடங்க ஆவன செய்து வருவதாக ஏற்கனவே ஒரு உறுப்பினர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுது கூறியிருக்கிறேன். அடுத்து, கோமாரி நோய் பற்றிக் கூறிப்பிட்டார்கள், அந்த இடத்தில் கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளைப்பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை; தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கிறேன்.

வாழைப்பந்தல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை.

*வினா எண் 471—திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தாலுக்கா வாழைப்பந்தல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் ஏதேனும் உண்டா?

(ஆ) அத் திட்டத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்படும்?